**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 336/2019 |
| Name | : | Ganesan |
| P.W. | : | 8 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் காங்கேயம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 09.04.2017 அன்று கொமரலிங்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை 10.30 மணிக்கு பாப்பான்குளத்தை சேர்ந்த காளிமுத்து மகன் சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராக கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று கொமரலிங்கம் காவல் நிலைய குற்ற எண். 67/2017 இதச பிரிவுகள் 279, 337, 304(A) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் மற்றும் புகாரை இணைத்து உடுமலை நீதித்துறை நடுவர் எண். 1 க்கும் நகல் மற்றும் புகாரை மேல் விசாரணைக்கு காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) புகாரை காவல் நிலையம் வரும் போது எழுதி கொண்டு வந்தார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் காவல் நிலையத்தில் வைத்து காலரால் எழுதப்பட்ட புகாரில் அ.சா.1 கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல. புகாரில் விபத்தில் இறந்து போன நபரும், அசா.1 எதற்காக கொழுமம் சென்றார்கள் என்று கண்டு எழுதவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் இறந்து போன நபர் மது போதையில் வாகனத்தை ஓட்டி வந்து பெட்ரோல் பங்கில் திரும்பிக் கொண்டிருந்த எதிரி ஓட்டி வந்த லாரி அவர்களாக மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றும், நான் சரிவர விசாரிக்காமல் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.12 18:52:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்